செய்தி வெளியீடு எண்: 474 நாள்: 07.08.2019

<u>பொது (தேர்தல்கள்–9)த் துறை</u>

## பணித்தொகுதி வாக்காளர்கள் மின்னணு முறையில் அஞ்சல் வாக்குகளை அனுப்பும் முறையால் மக்களவைத் தேர்தல் 2019–ல் அதிக அளவில் பங்கேற்பு

உலகின் மிகப்பெரிய மக்களாட்சித் தேர்தல் நடைமுறையில் அண்மையில், நடைபெற்று முடிந்த 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல், பல சாதனைகளுக்கு வித்திட்டது. அவற்றில் அஞ்சல் வாக்குகளை மின்னணு முறையில் அனுப்புதல் (ETPBS) எனும் முறை தேர்தல் நடைமுறையில் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்ட 13,27,627 பணித்தொகுதி வாக்காளர்களுடன் ஒப்பிடுகையில், தற்போது நடைபெற்று முடிவடைந்த 2019 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் உயரளவாக 18,02,646 பணித் தொகுதி வாக்காளர்கள், அதற்காக, தனித்துவமாக உருவாக்கப்பட்ட https://www.servicevoter.eci.nic.in என்ற இணைய வழியின் வாயிலாக தங்களை வாக்காளர்களாக பதிவு செய்திருந்தனர். மேற்காணும் பணித் தொகுதி வாக்காளர்களுக்கு மின்னணு முறையில் அஞ்சல் வாக்கு சீட்டுகள் அனுப்பப்பட்டன. முதன் முறையாக பணித்தொகுதி வாக்காளர்களுக்காக அஞ்சல் வாக்கு சீட்டுகளை அனுப்புவதற்காக கையாளப்படும் நடைமுறையில் ஏற்படும் கால அளவு, செலவு ஆகியவற்றைக் குறைப்பதற்காகவும், மனிதத் தவறுகளை தடுப்பதற்காகவும், முழுமையான இணையவழி தகவு ஒன்று பயன்படுத்தப்பட்டது.

மத்திய படைப்பிரிவில் ஆயுதச்சட்டத்தின்கீழ் பணிபுரிபவர்கள் மற்றும் நாட்டிற்கு வெளியே தூதரகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் ஆகியோர் பணித்தொகுதி வாக்காளர்களாக வகைப்படுத்தப்பட்டு இணையதளத்தின் மூலம் பதிவேற்றம் செய்துகொள்ள வழிவகைகள் செய்யப்பட்டன. மொத்தமுள்ள பணித்தொகுதி வாக்காளர்களில், 10,16,245 நபர்கள் பாதுகாப்பு அமைச்சகத்திலிருந்தும், 7,82,595 நபர்கள் உள்துறை அமைச்சகத்திலிருந்தும் (மத்திய ஆயுதக் காவல் படைகள்), 3539 நபர்கள் வெளியுறவுத் துறை அமைச்சகத்திலிருந்தும் மற்றும் 267 நபர்கள் மாநிலக் காவல் துறைகளிலிருந்தும் இடம் பெற்றிருந்தனர். ஏழு கட்டங்களாக நடைபெற்ற இந்தத் தேர்தலில், இந்திய தேர்தல் ஆணையத்தின் தகவல் தொழில் நுட்பத் திட்டத்தின் வாயிலாக பணித்தொகுதி வாக்காளர்களுக்கான அஞ்சல் வாக்குகளை மின்னணு முறையில் அனுப்பும் நடைமுறையைப் (ETPBS) பயன்படுத்தி மொத்தம் 18,02,646 அஞ்சல் வாக்குகள் பணித்தொகுதி வாக்காளர்களுக்கு அனுப்பப்பட்டன. அதன் வாயிலாக 2019–ல் 10,84,266 பதிவு செய்யப்பட்ட அஞ்சல் வாக்குகள் மின்னணு முறையில் பெறப்பட்டன. இவை மொத்தத்தில் 60.14 விழுக்காடு ஆகும். இதுவே 2014–ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது வெறும் 4 விழுக்காடாக இருந்தது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு மக்களவைத் தேர்தல்களை ஒப்பிடுகையில் இது கணிசமான முன்னேற்றமாகும்.

பணித்தொகுதி வாக்காளர்களின் பயன்பாட்டிற்காக, அவர்களுடைய அஞ்சல் வாக்குகளை மின்னணு முறையில் அனுப்புவதற்கான நடைமுறை (ETPBS) இந்திய தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டது. இந்நடைமுறையானது இரண்டு அடுக்கு பாதுகாப்புடன் முழுமையாக பாதுகாக்கப்பட்ட அமைப்பு முறையாகும். அஞ்சல் வாக்குகளை மின்னணு முறையில் (ETPBS) அனுப்பும் நிகழ்வில் ஒரு முறை பயன்படுத்தக்கூடிய கடவுச் சொல் (OTP) மற்றும் தனி நபருக்கான அடையாள எண் (PIN) ஆகியவற்றால் வாக்களிக்கும் இரகசியம் காக்கப்படுகிறது. மேலும், இம்முறையில் https://www.etpbs.in. என்ற தகவுடன் இணைக்கப்பட்ட எதிர்ச் செயல் குறியீட்டைப் (QR code) பயன்படுத்தி போலியான முறையில் அஞ்சல் வாக்குகள் செலுத்தப்படுவது தடுக்கப்பட்டது. இம்முறையில் பணித்தொகுதி வாக்காளர்கள் தங்கள் தொகுதிக்கு வெளியில் எங்கிருந்தாலும் மின்னணு முறையில் பெறப்பட்ட வாக்குச்சீட்டுகள் மூலம் தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர். இதன் மூலம் அவர்களின் ஓட்டுரிமையை இழக்கும் வாய்ப்பு

குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்த இணைய முறை உருவாக்கப்பட்டதன் நோக்கமே, பாதுகாப்புப் பணியாளர்கள் வசதியாகவும், எளிதான முறையிலும் தங்களை பணித்தொகுதி வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதற்காகும்.

"எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது" என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் நோக்கத்தினை எய்துவதற்கேற்ப, நாட்டிற்காக தங்கள் கடமையை ஆற்றும்போது, தகுதியுள்ள பணித்தொகுதி வாக்காளர்கள் அனைவரும் அவர்களுக்கு அரசியலமைப்பால் அளிக்கப்பட்டுள்ள வாக்குரிமையை செலுத்துவதற்கு இந்த புதிய முறையான "அஞ்சல் வாக்குகளை மின்னணு முறையில் அனுப்பும் நடைமுறை (ETPBS)" உரிய அதிகாரமும், உத்திரவாதமும் அளித்திருக்கிறது.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு செயலாளர்
தமிழ் நாடு

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**